செய்தி வெளியீடு எண் : 52 நாள் : 25.08.2017

தேனி மாவட்டம்,
தமிழக அரசின் உத்தரவின்படி,
செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில்,
தமிழக அரசின் சிறப்பு சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியினை
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள்
திறந்து வைத்து பார்வையிட்டார்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிலமலை ஊராட்சியில் தமிழக அரசின் உத்தரவின்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சிறப்பு சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம்,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழக அரசின் உத்தரவின்படி, தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க சிறப்பு புகைப்படக்கண்காட்சியில் தமிழக அரசின் வளர்ச்சித்திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள், அரசின் நலத்திட்ட உதவிகள் மற்றும் மாவட்டத்தில் நடைபெற்ற அரசின் முக்கிய நிகழ்வுகள் குறித்த புகைப்படங்களை ஒருங்கிணைத்து பொதுமக்கள் அறிந்து தெரிந்து கொள்வதற்காக தமிழக அரசின் சாதனை விளக்க சிறப்பு புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

இக்கண்காட்சியினை எண்ணூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் பார்வையிட்டு கண்டுகளித்தனர். பொதுமக்கள் தெரிவிக்கையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை எளிதான முறையில் அறிந்து தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது எனத்தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.கார்த்திகேயன் அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.ரசிகலா அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதிஉமையாள் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.தங்கவேல் அவர்கள், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி.ராஜராஜேஸ்வரி அவர்கள், போடிநாயக்கனூர் வட்டாட்சியர் திரு.சரவணன் அவர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.அ.கதிரவன் அவர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) திரு.அ.இளையேந்திரன் அவர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி